TAMILTH	Madurai	1	Regional_02	M. SARAVANAKUMAR	220816	50415

நகரில் நடப்பவை

மதுரை

- மதுரை புத்தகத் திருவிழா 8-ம் நாள், மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்கம், பபாசி, மதுரை மாநாட்டு மையம், தமுக்கம் மைதானம், கண்காட்சி காலை 10, பள்ளி, கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், மாலை 4, சிறப்புரை- எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன், மாலை 6.
- திருக்கார்த்திகை தீபத் திருவிழா 4-ம் நாள், மீனாட்சி அம்மன் கோயில், சுவாமி அம்மன் புறப்பாடு, ஆடி வீதி, காலை 9, மாலை 6.
- திருக்கார்த்திகை தீபத் திருவிழா 6-ம் நாள், திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில், தங்கச்சப்பரம், காலை 10.30, சைவ சமய ஸ்தாபித வரலாற்று லீலை, சத்தியகிரீஸ்வரர், கோவர்த்தனாம்பிகை அம்மன் ரிஷப வாகனத்தில் புறப்பாடு, இரவு 7, சுப்பிரமணிய சுவாமி, தெய்வானை அம்மன் தங்கமயில் வாகனத்தில் புறப்பாடு, இரவு 8.30.
- பண்பாட்டு இலக்கிய நிகழ்வு, திருவள்ளுவர் மன்றம், தலைப்பு- அவ்வையார் அருள் அமுதம், பேசுபவர்- சுகுமாரி, சக்தி வேலம்மாள் நகர், மாலை 5.
- ஆன்மிக இலக்கிய சொற்பொழிவு, மதுரைத் திருவள்ளுவர் கழகம், வடக்காடி வீதி, இரவு 7.

பழநி

- திருக்கார்த்திகை திருவிழா 4-ம் நாள்: பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயில், சண்முகார்ச்சனை, மாலை 6, சண்முகர் தீபாராதனை, மாலை 6.30, யாகசாலை தீபாராதனை, இரவு 7, தங்கரதப் புறப்பாடு, இரவு 7.30.

தேனி

- தேசிய நூலக வார விழா: மாவட்ட மைய நூலகம், வரவேற்பு: போடி கிளை நூலக நூலகர் எஸ்.கவிதா, தலைமை: மாவட்ட நூலக அலுவலர் முத்துக்குமரன், காலை 10.30.

தேனி லாரி ஓட்டுநர் உயிரிழந்த விவகாரம்

காவல் நிலையங்களின் சிசிடிவி பதிவுகளை உறவினர்கள் பார்க்க அனுமதி

■ **மதுரை**

மதுரை காவல் நிலையத்தில் புகார் அளிக்கச் சென்ற லாரி ஓட்டுநர் உயிரிழந்த விவகாரத்தில் 4 காவல் நிலையங்களின் சிசிடிவி காட்சிகளை உறவினர்கள், வழக்கறிஞர் பார்க்க உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மதுரை செக்கானூரணி காவல் நிலையத்தில் புகார் அளிக்கச் சென்ற தேனியைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் பாலகிருஷ்ணன் அங்குள்ள கழிப்பறையில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாக கூறப்பட்டது.

பாலகிருஷ்ணன் உடலில் பல்வேறு இடங்களில் காயங்கள் இருப்பதாகவும், இதனால் அவரை போலீஸார் அடித்துக் கொலை செய்திருக்கலாம் என்றும் உறவினர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் பாலகிருஷ்ணனின் மனைவி சுதா, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், கணவரின் உடலில் வலது தோள்பட்டை, முதுகின் நடுப்பகுதி, மார்பு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் காயங்கள் இருப்பது உடற்கூறாய்வில் தெரியவந்துள்ளது. கணவர் உயிரிழப்புக்கு முன்பாக அவரை காவல் துறையினர் சித்திரவதை செய்துள்ளனர்.

எனவே, செக்கானூரணி காவல் நிலைய கழிப்பறையில் இருந்து கணவரின் உடல் அகற்றப்படுவதற்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகளை பாதுகாத்து வைக்கவும், செக்கானூரணி, வாலாந்தூர், உசிலம்பட்டி நகர் மற்றும் தாலுகா காவல் நிலையங்களில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை பாதுகாத்து அதன் நகல்களை வழங்கவும் உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார். இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்த போது செக்கானூரணி உள்ளிட்ட 4 காவல் நிலையங்களின் 13, 14-ம் தேதி சிசிடிவி காட்சிகளின் நகல்களை தாக்கல் செய்ய உத்தரவிடப் பட்டது.

இந்த மனு நீதிபதி ஆர்.விஜயகுமார் முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில், 4 காவல் நிலையங்களின் சிசிடிவி பதிவுகள் டிஎஸ்பியிடம் பாதுகாப்பாக உள்ளன.

விரைவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படும். அந்த பதிவுகளை மனுதாரருக்கு வழங்கினால் விசாரணையில் பாதிப்பு ஏற்படும் எனக் கூறப்பட்டது.

மனுதாரர் தரப்பில், உசிலம்பட்டி டிஎஸ்பி முகாம் அலுவலக சிசிடிவி பதிவுகளையும் வழங்க வேண்டும். காவல் நிலையத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது உடலை புகைப்படம் எடுக்கவில்லை.

சிசிடிவி பதிவுகளை பார்க்க மனுதாரருக்கு உரிமை உள்ளது எனக் கூறப்பட்டது.

பின்னர் நீதிபதி, ஓட்டுநர் மரணத்தில் காவல் நிலையத்தின் சிசிடிவி பதிவுகளில் சில காட்சிகளை மட்டும் ஏன் கசிய விட்டுள்ளீர்கள். மனுதாரருக்கு சிசிடிவி காட்சிகளை வழங்க மறுப்பது ஏன்? பதற்றமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு காட்சிகள் வெளியாகி இருக்கலாம் என அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. அப்படி என்றால் டீசர் போல் குறிப்பிட்ட காட்சிகளை மட்டும் ஏன் வெளியிட்டீர்கள்.

4 காவல் நிலையங்களின் பதிவான சிசிடிவி காட்சிகளை நவ.23-ம் தேதி மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் 2 பேர் மற்றும் வழக்கறிஞர் ஆகியோர் பார்வையிட அனுமதி வழங்கப்படுகிறது. அந்த காட்சிகளை பதிவு செய்யக்கூடாது. குடும்பத்தினர் செய்தியாளர்களை சந்திக்கக் கூடாது. இந்த நிபந்தனைகளுடன் சிசிடிவி காட்சிகளை பார்வையிட அனுமதி வழங்கப்படுகிறது. மனு முடிக்கப்படுகிறது என நீதிபதி உத்தரவிட்டார்.

தந்தையை கொல்ல முயன்ற மகனுக்கு 10 ஆண்டு சிறை

■ **உத்தமபாளையம்**



கார்த்திகேயன்

உத்தமபாளையம் ராயப்பன்பட்டி அருகே சின்னஓவுலாபுரத்தைச் சேர்ந்தவர் கார்த்திகேயன்(40). இவர் தனது தந்தை மொக்கைப் பாண்டியின்பெயரில்உள்ளவீட்டை 2024-ம் ஆண்டு பிப்ரவரியில் தனது பெயருக்கு மாற்ற விரும்பினார். அதற்கு, மொக்கைப்பாண்டி மறுக்கவே வாக்குவாதத்தில் ஈடுபட்டு, அவரை கத்தியால் குத்தி கொல்ல முயன்றார். இதுகுறித்த புகாரின் பேரில், ராயப்பன்பட்டி போலீஸார் கார்த்திகேயனை கைது செய்தனர்.

இதுகுறித்த வழக்கு, தேனி மாவட்டக் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்றது. கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞராக செல்வம் ஆஜரானார். இதில் நீதிபதி ஸ்ரீதேவி, கார்த்திகேயனுக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்தார்.



மதுரை மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை பல் மற்றும் தாடை முக அறுவை சிகிச்சைத் துறை தலைவர் ஜிப்ரீல் ஓய்சுல் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார் (நடுவில்).

மதுரைக்கு பல் சிகிச்சை பெற வருகை தரும் வெளிநாட்டினர்

■ **மதுரை**

மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் பல் மற்றும் தாடை முக அறுவை சிகிச்சைத் துறை தலைவர் ஜிப்ரீல் ஓய்சுல் கூறியதாவது:

வெளிநாடுகளைச் சேர்ந்த நோயாளிகள் பல் மருத்துவத் தேவைகளுக்காக மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையைத் தேர்வு செய்வது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பற்களைச் சீரமைக்கும் கிளியர் அலைனர், டென்டல் இம்ப்ளாண்ட் முதல் முழு வாய் மறுசீரமைப்பு மற்றும் ஸ்மைல் டிசைன் வரை பல்வேறு சிகிச்சைகளை நாங்கள் வழங்கி வருகிறோம். அனைத்து சிகிச்சைகளையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைத்து வழங்குகிறோம். இங்கு ஆண்டுக்கு 30,000 நோயாளிகள் பல் சிகிச்சை பெறுகின்றனர். இவர்களில் சுமார் 2,500 பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். நவீன தொழில்நுட்பம், மருத்துவ நிபுணத்துவம் மற்றும் தனிப்பட்ட கவனிப்பு மூலம் நோயாளியின் புன்னகையை முழுமையாக மேம்படுத்துவதே நோக்கம். மருத்துவச் சிகிச்சைக்கான அங்கீகரிக்கப்பட்ட மையமாக மதுரையை உருவாக்கி சர்வதேச மருத்துவ வரைபடத்தில் மதுரையின் இடத்தை மேலும் வலுப்படுத்துவதே எங்களது இலக்காகும். இவ்வாறு அவர் கூறினார்.

பல் மற்றும் முகத்தாடை அறுவை சிகிச்சைத் துறை இணை ஆலோசகர் தாமோதரன், விசிட்டிங் கன்சல்டன்ட் ஞானேஸ்வரன், மருத்துவமனை இயக்குநர் திலீப் ஆகியோர் உடன் இருந்தனர்.

போராடிய பாஜகவினர் 50 பேர் மீது வழக்கு

■ **பெரியகுளம்**

பெரியகுளம் சோத்துப்பாறை அணையிலிருந்து வரும் நீரின் மதகை அத்துமீறி தவெகவினர் திறந்துவிட்டதாக, பாஜகவினர் நேற்று நீர்வளத்துறை செயற்பொறியாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அனுமதியின்றி போராட்டம் நடத்தியதாக, தென்கரை போலீஸார் பாஜக மாவட்டத் தலைவர் ராஜ பாண்டி உள்ளிட்ட 50 பேர் மீது வழக்குப் பதிவு செய்தனர்.

கனரா வங்கி — மண்டல அலுவலகம் திண்டுக்கல்

தங்க நகைக்கான ஏல விற்பனை பொது அறிவிப்பு

எங்களது வங்கிக் கிளைகளில் கீழ்க்கண்ட நபர்கள் தங்க நகைகளை அடமானம் வைத்து, கடன் பெற்று இதுநாள் வரை கடனை திரும்பச்செலுத்தாமல், சாதாரண தபால் மூலமும், பதிவு தபால் மூலமும் இதுபற்றி தெரிவித்தும் நகைகளை மீட்கவில்லை. ஆகவே இந்த விளம்பரம் கண்டவுடன் அசல், வட்டி, தபால், விளம்பரச்செலவுகள் சேர்த்து **30.11.2026ஆம் தேதிக்குள்** பணத்தைச்செலுத்தி நகைகளை மீட்டுக்கொள்ளவும். தவறும்பட்சத்தில் கீழ்காணும் தேதியில் ஏல முறையில் வங்கி அந்தந்த கிளையில் வைத்து நகைகளை பகிரங்க ஏலத்தில் விடப்படும். கடன்தாரர் இறந்திருந்தால் அன்னாரது வாரிசுதாரர்களுக்கும், வெளியூர் மற்றும் வெளிநாடுகளுக்கு சென்ற கடன்தாரர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலத்தொகை கடன் நிலுவை தொகைக்கு குறைவாக இருந்தால், மீதித்தொகையை வசூலிக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். ஏலத்தொகை கடன் நிலுவைக்கு கூடுதலாக பெறப்பட்டால், கடன்தாரரிடம் திருப்பி அளிக்கப்படும் அல்லது அன்னாரது வேறு தவணை தவறிய கடன்களுக்கு வரவு வைக்கப்படும். ஏலத்தை மறு அறிவிப்பின்றி ஒத்திவைக்கவோ. ஏலத்தேதியை மாற்றுவதற்கோ, ரத்து செய்யவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன் பெற்றவர் பெயர் மற்றும் முகவரி	நிலுவை தொகை (ரூ.)
	கிளையின் பெயர்: குளத்தூர் (01583) – வங்கி தொடர்பு எண்: 9489045749		
1	164133103908	அமராவதி P க/பெ பழனிச்சாமி S, 1/74 வடக்கு தெரு, மொளபடியூர், படியூர் அஞ்சல், திண்டுக்கல் - 624005	32,000.00
	ஏலத்திற்கான தேதி மற்றும் நேரம்: 05.12.2026. மாலை 4.00 மணி		
	ஏல முன்வைப்புத் தொகையை 04.12.2026 அன்று மாலை 4.00 மணிக்குள் வங்கியில் செலுத்த வேண்டும்		
	கிளையின் பெயர்: விருவீடு (01540) – வங்கி தொடர்பு எண்: 9489045871		
2	164135249096	சின்னம்மாள் க/பெ. நாகராஜ், 199 1 கிழக்குத் தெரு, இராசதானிக்கோட்டை, P சண்டையூர், விருவீடு, திண்டுக்கல் - 624220	82,000.00
3	180229925942	சரவணன் மொக்கமாயன் த/பெ. மொக்கமாயன், 2/201, காலனி, நடக்கோட்டை, திண்டுக்கல் - 624220	39,000.00
	ஏலத்திற்கான தேதி மற்றும் நேரம்: 07.12.2026. மாலை 4.00 மணி		
	ஏல முன்வைப்புத் தொகையை 05.12.2026 அன்று மாலை 4.00 மணிக்குள் வங்கியில் செலுத்த வேண்டும்		
	கிளையின் பெயர்: வீரக்கல் (04047) – வங்கி தொடர்பு எண்: 9489045875		
4	180460469080	ராஜகுமாரன் மே/பா. பரமேஸ்வரன் ஆத்துப்பட்டி பிரிவு, வீரக்கல், பாலசமுத்திரம், திண்டுக்கல்- 624303	85,000.00
	ஏலத்திற்கான தேதி மற்றும் நேரம்: 08.12.2026. மதியம் 1.00 மணி		
	ஏல முன்வைப்புத் தொகையை 07.12.2026 அன்று மாலை 4.00 மணிக்குள் வங்கியில் செலுத்த வேண்டும்		
	கிளையின் பெயர்: ஆத்தூர் (01342) – வங்கி தொடர்பு எண்: 9489045711		
5	164119817100	மணிகண்டன் N த/பெ. நாகப்பன், 1 2 பள்ளர் தெரு, ஆத்தூர் திண்டுக்கல் - 624701	1,10,000.00
	ஏலத்திற்கான தேதி மற்றும் நேரம்: 08.12.2026. மாலை 4.00 மணி		
	ஏல முன்வைப்புத் தொகையை 07.12.2026 அன்று மாலை 4.00 மணிக்குள் வங்கியில் செலுத்த வேண்டும்		
	கிளையின் பெயர்: சின்னகலையம்புத்தூர் (08825) – வங்கி தொடர்பு எண்: 9489046130		
6	180362607860	செந்தில் குமார் மே/பா. ஞானசேகர், 280/D, விநாயக நகர் காலனி, சுக்கமநாயக்கன்பட்டி, பெத்தநாயக்கன்பட்டி - 624615	3,14,000.00
	ஏலத்திற்கான தேதி மற்றும் நேரம்: 09.12.2026. மாலை 4.00 மணி		
	ஏல முன்வைப்புத் தொகையை 08.12.2026 அன்று மாலை 4.00 மணிக்குள் வங்கியில் செலுத்த வேண்டும்		
	கிளையின் பெயர்: கீரனூர் (00947) – வங்கி தொடர்பு எண்: 9489045742		
7	180281420860	வேலுச்சாமி த/பெ. பழனி கவுண்டர், 1 37, ராஜம்பட்டி, பழனி - 624601	40,000.00
	ஏலத்திற்கான தேதி மற்றும் நேரம்: 10.12.2026. மதியம் 1.00 மணி		
	ஏல முன்வைப்புத் தொகையை 09.12.2026 அன்று மாலை 4.00 மணிக்குள் வங்கியில் செலுத்த வேண்டும்		
	கிளையின் பெயர்: பழனி (01018) – வங்கி தொடர்பு எண்: 9489045785		
8	164097152832	முனியாண்டி A அம்மாபட்டி, 16 கணபதி தெரு, கவுண்டன்குளம், பழனி, திண்டுக்கல் - 624601	21,000.00
	ஏலத்திற்கான தேதி மற்றும் நேரம்: 10.12.2026. மாலை 4.00 மணி		
	ஏல முன்வைப்புத் தொகையை 09.12.2026 அன்று மாலை 4.00 மணிக்குள் வங்கியில் செலுத்த வேண்டும்		

ஏல முன்வைப்புத்தொகை ரூ.25,000/–

மேலே விவரிக்கப்பட்டுள்ள நகைகளை பார்வையிடுவதற்கான தேதி மற்றும் நேரம் அலுவலக நாட்களில் **காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிக்குள்** வங்கி கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம்.

இடம் : திண்டுக்கல் — மண்டல மேலாளர்.
தேதி : 20.11.2026 — கனரா வங்கி

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

NAME CHANGE

I, JOY MARJORIE ANNAL DEVA CHANDRA DOSS, Wife of G. John David Raja, aged about 47 years, residing at 5.9/1.1, Jubilee, Balaji Nagar 1st street, Kosakulam Main Road, Anaiyur, Madurai-625017 Shall henceforth be known as JOY MARJORIE ANNAL DOSS.

JOY MARJORIE ANNAL DEVA CHANDRA DOSS
Madurai, 20th November 2026

பொது

விற்பனை

EASYTECH CCTV CAMERA



ஈஸிடெக் எலக்ட்ரானிக்ஸ்
AN ISO 9001-2008 COMPANY
இலவச டெமோவிற்கு அழைக்கவும்
74488 88901
95009 30200
www.easytechcctv.com



UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: கதவு எண்.24, புது அக்ரஹாரம், பழனி ரோடு, JCB மருத்துவமனை அருகில், நேருஜி நகர், திண்டுக்கல், தமிழ்நாடு-624001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, **"உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு"** எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தார்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1607350250000019 / 1.Mr.சங்கர் 2.Mrs.முத்துலட்சுமி	(I) 30.07.2025 & 29.07.2025 அன்றுள்ளபடி ₹ 4,89,946/- (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தாறு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.12.2025 & நேரடி சுவாதீனம் - 03.03.2026	19.11.2026 அன்றுள்ளபடி ₹ 6,54,432/- (ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து நானூற்று முப்பத்திரண்டு மட்டும்)	₹ 3,27,000/- (ரூபாய் மூன்று லட்சத்து இருபத்து ஏழாயிரம் மட்டும்)	₹ 32,700/- (ரூபாய் முப்பத்து இரண்டாயிரத்து எழுநூறு மட்டும்)

சொத்து விவரம்: திண்டுக்கல் பதிவு மாவட்டம், செந்துரை சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.294/4B, **கதவு எண்.5/124, சேத்தூர் கிராமம்** என்னும் முகவரியில் மொத்தமுள்ள **2 ½ சென்ட்டில் 272 சதுர அடி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: முத்தையா வீடு, தெற்கு: பழனியாண்டி வீடு, கிழக்கு: முத்து சிதம்பரம் மற்றும் இதர புஞ்சை, மேற்கு: வழிப்பாதை.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 10.12.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 09.12.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 08.12.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : **Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961.**

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 21.11.2026 — ஒப்பம்/- **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

JM ஃபைனான்சியல் ஹோம் லோன்ஸ் லிமிடெட்

கார்ப்பரெட் அலுவலகம் : 3-வது தளம், சுவாசிஷ் IT பார்க், மனை எண்.68E, ஆஃப் தட்ட பட்டா ரோடு, டாடா ஸ்டீல் எதிரில், பொரிவலி (E), மும்பை - 400 066

கேட்பு அறிவிப்பு

நிதிச் சொத்துகளின் பாதுகாப்பாக்கம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு உரிமை அமலாக்கச் சட்டம், 2002 ("சட்டம்")-இன் பிரிவு 13(2)-இன் கீழ்,பாதுகாப்பு உரிமை (அமலாக்கம்) விதிகள்,2002 ("விதிகள்")-இன் விதி 3-உடன் சேர்த்து வாசிக்கப்படும்போது.

JM ஃபைனான்சியல் ஹோம் லோன்ஸ் லிமிடெட் (JMFHLL)-இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி தொடர்புடைய சட்டத்தின் பிரிவு 13(12) மற்றும் அதன்கீழ் வெளியிடப்பட்ட விதிகளின் விதி 3 ஆகியவற்றின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, அச்சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழ் விரிவான கேட்பு அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பின் மூலம், கீழே பட்டியலிடப்பட்டுள்ள கடன் பெற்றவர்(கள்)/இணை-கடன் பெற்றவர்(கள்)/பிணையதாரர்(கள்) (இவர்கள் அனைவரும் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ "கடமைப்பட்டவர்கள்" என்று குறிப்பிடப்படுகிறார்கள்) மற்றும் சட்டப்பூர்வ வாரிசுதாரர்(கள்)/சட்டப்பூர்வ பிரதிநிதிகள் ஆகியோர், அந்தந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்படி அறிவிப்புகளின் நகல்கள் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன; மேலும் அவை என்னிடம் உள்ளன. சம்பந்தப்பட்ட கடமைப்பட்டவர்(கள்)/சட்டப்பூர்வ வாரிசுதாரர்(கள்)/சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) விரும்பினால், அலுவலக வேலை நாட்களில், வழக்கமான அலுவலக நேரத்திற்குள் என்னிடமிருந்து அந்தந்த நகலைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட கடனாளிகள் / சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் / சட்டப்பூர்வப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு மீண்டும் ஒருமுறை அறிவிப்பு விடுக்கப்படுகிறது: அவர்கள், அந்தந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், தங்கள் பெயர்களுக்கு நேராகக் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும், அத்துடன் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளிலிருந்து பணம் செலுத்தும் அல்லது தொகை வசூலிக்கப்படும் தேதி வரை கணக்கிடப்படும் கூடுதல் வட்டியையும் JMFHLL-க்குச் செலுத்த வேண்டும். இத்தொகையானது, சம்பந்தப்பட்ட கடனாளிகளால் மேற்கொள்ளப்பட்ட கடன் ஒப்பந்தம் மற்றும் பிற ஆவணங்கள்/எழுத்துப்பூர்வமான ஒப்பந்தங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும். இக்கடனை முறையாகத் திருப்பிச் செலுத்துவதற்கான பிணையமாக, பின்வரும் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட கடனாளிகளால் JMFHLL-இடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

வ. எண்ண்.	கடந்தார், இணை கடந்தார் மற்றும் பிணையதாரர் பெயர் & LAN	சொத்து விவரம்	13(2) அறிவிப்பு தேதி, NPA தேதி & நிலுவைத்தொகை
1.	1.திருமதி.M.தேன்மொழி 2.திரு.K.முத்துபாண்டி கடன் கணக்கு எண். LMDU22000020651	**ஐட்டம் எண்.1:** திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பதிவு மாவட்டம், நத்தம் சார்பதிவு மாவட்டம், வேலம்பட்டி கிராமம், மறு சர்வே எண் 174/1-ல் உள்ள 97 சென்ட் நிலத்தில், மனை எண் 7-ன் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள நிலம் முழுவதும். எல்லைகள்: வடக்கு: ஐட்டம் எண் 2, தெற்கு: பொன்னையா நிலம், கிழக்கு: 15 அடி அகல கிழக்கு-மேற்கு பொதுத் தெரு, மேற்கு: L.M. ராஜமாணிக்கம் நிலம். அளவுகள்: வடக்கு பக்கத்தில் கிழக்கு-மேற்கு: 30 அடி, தெற்கு பக்கத்தில் கிழக்கு-மேற்கு: 30 அடி. கிழக்கு பக்கத்தில் வடக்கு-தெற்கு: 15 அடி. மேற்கு பக்கத்தில் வடக்கு-தெற்கு: 15 அடி. மொத்த பரப்பளவு: 450 சதுர அடி மற்றும் இதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும். **ஐட்டம் எண்.2:** நத்தம் சார்பதிவு மாவட்டம், வேலம்பட்டி கிராமம், மறு சர்வே எண் 174/1-ல் உள்ள 97 சென்ட் நிலத்தில், மனை எண் 6-ன் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள நிலம் முழுவதும். எல்லைகள்: வடக்கு: M.மனோகரன் அவர்களின் மனை எண்.6. தெற்கு: ஐட்டம் எண்.1 கிழக்கு:15 அடி அகல கிழக்கு-மேற்கு பொதுத் தெரு. மேற்கு: L.M. ராஜமாணிக்கம் நிலம். அளவுகள்: வடக்கு பக்கத்தில் கிழக்கு-மேற்கு: 30 அடி. தெற்கு பக்கத்தில் கிழக்கு-மேற்கு: 30 அடி. கிழக்கு பக்கத்தில் வடக்கு-தெற்கு: 8 ½ அடி. மேற்கு பக்கத்தில் வடக்கு-தெற்கு: 8 ½ அடி மொத்த பரப்பளவு: 255 சதுர அடி. கூட்டுச் சொத்து விவரம்: எனவே, சொத்து விவரம் 1 மற்றும் 2 சேர்ந்து மொத்தம் 705 சதுர அடி நிலமும், அதில் கதவு எண் 1/726/A1 கொண்ட குரைத்தளம் + முதல் தளம்) கட்டப்பட்ட RCC வீடும் , அதன் அனைத்து மாமூல் வசதிகளும் உட்பட மற்றும் இதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும்.	**1. 13-11-2026** **2. 11-11-2026** **3. 13-11-2026** வரையிலான நிலுவைத்தொகை **ரூ. 11,58,925/-** (ரூபாய் பதினோறு லட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்)

*மேலும் வட்டியுடன், மேலே குறிப்பிட்டுள்ள அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் கூடுதல் வட்டி, இதர செலவுகள், செலவுகள், கட்டணம் போன்றவை பணம் செலுத்தும் தேதி வரை